பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 08 2026 7 15

திங்கட்கிழமை காலை

ஆகாஷ்வாணி

செய்திகள் - வாசிப்பவர் - ரெங்கநாதன்

தலைப்புச் செய்திகள்

1. புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தி திறன் இந்தியாவில் 300 ஜிகாவாட்டைத் தாண்டி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

2. போதைப்பொருட்களுக்கு எதிரான இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா கட்சே கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அசாம் மாநிலத்தில் மழை வெள்ளத்திற்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது.

4. பாலஸ்தீன மக்களுக்கு நிவாரண உதவிகள் தடையின்றி கிடைக்க காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்று எகிப்து வலியுறுத்தியுள்ளது.

5. ஆசிய ஜூனியர் பளுதூக்குதல் போட்டியில் இந்திய வீரர் மகாராஜன் ஆறுமுகப் பாண்டியன் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தி திறன் இந்தியாவில் 300 ஜிகாவாட்டைத் தாண்டி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

கடந்த மாதம் 31ஆம் தேதியன்று இந்த மைல்கல் எட்டடப்பட்டுள்ளது.

இது 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் மின் உற்பத்தியை எட்ட வேண்டும் என்ற இலக்கில் இது 60 சதவீதத்திற்கும் அதிகமாகும்.

நாட்டின் மொத்த மின் உற்பத்தி திறனில் புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தித் திறனின் 54 சதவீதத்தை எட்டியுள்ளதாக மத்திய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பல்வேறு துறைகளின் வலுவான பங்களிப்பால் தூய்மையான எரிசக்தி உற்பத்தியில் நாடு வளர்ச்சியைக் கண்டுள்ளதாகவும், இதில் சூரிய மின்சக்தி முக்கிய ஆதாரமாக தொடர்வதாகவும் அந்த அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

<<<<>>>>

நாட்டில் இருந்து போதைப்பொருட்களை முற்றிலுமாக ஒழிக்க அதற்கான இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று மத்திய இளைஞர்

விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா கட்சே கூறியுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் ஜல்காவ்னில் இதுதொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் காணொலி வாயிலாக பேசிய அவர், இளைஞர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாகாமல் தேசத்தைக் கட்டமைக்கும் பணியில் கவனத்தை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆரோக்கியமான போதைப்பொருள் இல்லாத இளைய தலைமுறையே வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான உண்மையான பலம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் இல்லா சமுதாயத்தை உருவாக்க மத்திய அரசுடன் துறவிகள், ஆன்மிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் திருமதி ரக்ஷா கட்சே கூறினார்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சியில் பேரணிகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

அம்மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் முறைகேடு நடந்த தாகக் கூறி மாணவர்கள் கடந்த 2 வாரங்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இன்று சட்டப்பேரவையை நோக்கி பேரணி நடத்தப்படும் என்று மாணவர் அமைப்புகள் அறிவித்துள்ளதால் சட்டப்பேரவையை சுற்றி பேரணி, ஆர்ப்பாட்டங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தலைமை இயக்குநர் திரு. மனோஜ் கவுசிக் தெரிவித்துள்ளார்.

மாணவர் பேரணிக்கு பிஜேபி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்நிலையில் மாநில பிஜேபி தலைவர் திரு. ஆதித்ய சாஹு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அம்மாநிலத்தைச் சேர்ந்த பிஜேபி மூத்த தலைவர் திரு. அமர் பௌரி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில் மாணவர்களின் போராட்டத்தை அடுத்து ஜார்கண்ட் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்கள் 3 பேர் தங்களது பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர்.

திரு. அஜித் பட்டாச்சார்யா, திரு. ஜமீல் அகமது, திருமதி அனிமா Anima Hansda ஆகியோர் தங்களது ராஜினாமா கடிதங்களை அம்மாநில ஆளுநர் திரு. சந்தோஷ்குமார் கங்குவாரிடம் சமர்ப்பித்தனர்.

அவர்களது ராஜினாமாவை ஆளுநர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேச மாநிலத்தில் கடந்த 12 ஆண்டுகளில் விமானப் போக்குவரத்து கட்டமைப்பு மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

போபாலில் உள்ள ராஜ்போஜ் விமான நிலையத்தில் 4 புதிய விமான சேவைகளை நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்துப் பேசிய அவர், மாநிலத்தில் விமானப் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியானது, இரட்டை எஞ்சின் அரசின் வலிமையைக் காட்டுவதாக கூறினார்.

மத்தியப்பிரதேச அரசு கொண்டுவந்துள்ள புதிய விமானப் போக்குவரத்துக் கொள்கையால் தனியார் விமான நிறுவனங்கள் அரசுடன் இணைந்து செயல்பட ஆர்வம் காட்டுவதாக திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியப் பெருங்கடல் வழியாக இந்தியாவுக்கு புதிய ரயில் பாதையை அமைக்கும் திட்டத்தை ரஷ்யா முன்மொழிந்துள்ளது.

சரக்குப் போக்குவரத்திற்கு முக்கியமான கடல்வழிப் பாதைகளை இந்தியா சார்ந்திருப்பதை குறைப்பதற்கு இந்த திட்டம் உதவும் என்று ரஷ்யா கூறியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணை மற்றும் Bosphorus நீர்வழிகளில் ஏற்படும் அச்சுறுத்தல்களை சமாளிக்க இந்தப் புதிய ரயில் பாதை உதவக்கூடும் என்று ரஷ்ய துணைப்பிரதமர் திரு. Marat Khusnullin தெரிவித்துள்ளார்.

ரஷ்ய செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், துர்க்மெனிஸ்தான், ஈரான், ஆஃப்கனிஸ்தான் வழியாக செல்லும் ரயில் பாதையை இந்தியாவுடன் இணைக்கலாம் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

பொது சுகாதாரத் திறனை மேம்படுத்தும் வகையில் பொலிவியா நாட்டிற்கு 8 மெட்ரிக் டன் உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துகளை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

நட்பு நாடுகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா எப்போதும் தயாராக இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தனது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தானில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 15 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

Balochistan மாகாணத்திற்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு படையினர் ஒருவார காலம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இந்த தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

தீவிரவாதிகள் வைத்திருந்த ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

அசாம் மாநிலத்தில் மழை வெள்ளத்திற்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது.

மாநிலத்தின் பல மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சிவசாகர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 49 பேர் உயிரிழந்துள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கரீம்கஞ்ச், கோலாகாட், சோனித்பூர், கார்பிக் ஆங்லாங் மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட நிர்வாகங்கள், பொதுமக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றன.

மத்திய மாநில அரசுகள் இணைந்து நிவாரணம் மற்றும் மறுவாழ்வு முகாம்களை ஏற்படுத்தி உள்ளன.

இந்நிலையில் அசாம் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக சத்தீஸ்கட் மாநில அரசு 5 கோடி ரூபாய் நிதியுதவியை வழங்கியுள்ளது.

<<<<>>>>

இல்லம்தோறும் தேசியக்கொடி இயக்கத்தின் ஒரு பகுதியாக ஜம்மு-கஷ்மீரின் 20 மாவட்டங்களில் ஒருவார கால நிகழ்ச்சி தொடங்கியுள்ளது.

இதையொட்டி மூவர்ணக் கொடி பேரணிகள் நடைபெற்று வருகின்றன.

தேசபக்தியை எழுச்சியுறச் செய்யும் வந்தேமாதரம் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவுபெறுவதை முன்னிட்டும், நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இதன் ஒரு பகுதியாக ஜம்மு-கஷ்மீரிலும் பள்ளிகளிலும், பொது இடங்களிலும் தேசபக்தியை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

பாலஸ்தீன மக்களுக்கு நிவாரண உதவிகள் தடையின்றி கிடைக்க காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்று எகிப்து வலியுறுத்தியுள்ளது.

கெய்ரோவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Badr Abdelatty இது தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் முன்மொழிந்த காஸா அமைதி திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கூறினார்.

காஸாவில் இடைக்காலப் பாதுகாப்பை கண்காணிக்க சர்வதேச அமைதிப்படையை நிலைநிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**<<<<>>>>**

ராஜஸ்தான், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், மத்தியப்பிரதேசம் ஆகிய 4 மாநிலங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்ற வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அடுத்த 2 நாட்களுக்க ஹரியானா, தில்லி, அசாம், மேகாலயா மாநிலங்களிலும், ஜம்மு-கஷ்மீர், லடாக் உள்ளிட்ட யூனியன்பிரதேசங்களிலும் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

மணிப்பூர் மாநிலத்தில் நேற்று காவல்துறையினர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தீவிர தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இம்பால் மேற்கு மாவட்டம், கொய்ரும் சபல் பகுதியில் காவல்துறையினரும் 33வது அசாம் ரைபிள்ஸ் படையினரும் இணைந்து நடத்திய சோதனையில், 8 ஒற்றைக் குழல் துப்பாக்கிகள், ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 4 கை குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இம்பால் கிழக்கு மாவட்டத்தில் பொட்சங்பாம் குனூ அடிவாரப் பகுதியில் நடத்தப்பட்ட மற்றொரு சோதனையில் துப்பாக்கிகளும், கையெறி குண்டுகளும் கண்டுடெடுக்கப்பட்டன.

இதுபோன்ற சோதனைகள் தொடர்ந்து நடத்தப்படும் என்று மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆசிய ஜூனியர் பளுதூக்குதல் போட்டியில் இந்திய வீரர் மகாராஜன் ஆறுமுகப் பாண்டியன் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கண்டில் நேற்று நடைபெற்ற போட்டியில் 65 கிலோ எடைப்பிரிவில் இந்தப் பதக்கத்தை அவர் வென்றார்.

மொத்தம் அவர் 285 கிலோ எடையைத் தூக்கி தாம் ஏற்கனவே புரிந்த சாதனையையும் அவர் முறியடித்தார்.

--------------

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கூடைப்பந்து போட்டி அகமதாபாதில் இம்மாதம் 13ஆம் தேதி முதல் 23ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

வரும் 14ஆம் தேதி இந்தியா தனது முதல் போட்டியில் ஜப்பானை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டியில் இந்த இரு நாடுகளைத் தவிர தென்கொரியா, கஜகஸ்தான் உள்ளிட்ட நாடுகளும் பங்கேற்கின்றன.

---------------

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் பசந்த் குமார் மேக்வால் மற்றும் ஷாநவாஸ் கான் ஆகியோர் பதக்கம் வென்றுள்ளனர்.

ஆடவர் உயரம் தாண்டுதல் போட்டியில் பசந்த்குமார் மேக்வால் 2 புள்ளி இரண்டு ஒன்று மீட்டர் உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

நீளம் தாண்டுதல் போட்டியில் ஷாநவாஸ் கான் 7 புள்ளி எட்டு நான்கு மீட்டர் நீளம் தாண்டி வெண்கலப் பதக்கம் வென்றார்.

இவரும் இந்தப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ஏற்கனவே ஈட்டி எறிதலில் இந்திய வீரர் ஆஷிவ் யாதவ் வெள்ளிப் பதக்கம் வென்றதையடுத்து, இந்தப் போட்டியில் இந்தியா வென்றுள்ள பதக்கங்களின் எண்ணிக்கை 3ஆக அதிகரித்துள்ளது.

<<<<The End>>>>